# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 90 — 1973 දෙසැම්බර් 14 වැනි සිකුරාදා — 1973.12.14**

90 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் **அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது**)


# பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 1351 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | 1356 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 1356 | ஏலவிற்பனைகள் .. .. .. | — |
| ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | 1357 | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### *கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு*

*கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவின் பிரதான களஞ்சிய காப்பாளர் களஞ்சியத்திலுள்ள 9,706 வெற்று சீமேந்து பைகளின் விற்பனைக்கான கேள்விப் பத்திரங்களைக் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு கேள்விச் சபைத் தலைவர் 1973.12.28 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணி வரை ஏற்றுக்கொள்வார்.*

*1973.12.28 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்வியாளர்கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.*

*கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்ப விரும்பாத கேள்வியாளர்கள் கேள்விச் சபைத் தலைவரால் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரங்களை நேர்முகமாகக் கொடுத்து அவைகளை அவர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புக் கூற்றை எழுத்து மூலம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது அவர் நேர்முகமாக வந்து தங்களின் கேள்விப் பத்திரங்களை இத்திணைக்கள கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும்.*

*கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம்பந்தமான சாதனங்களைப் பார்வையிடலாம். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/- கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு சிறுப்பர் வழங்கிய பற்றுச்சீட்டுடன் கொழும்பு கப்பற்றுறை ஆணையாளருக்கு விண்ணப்பஞ் செய்வோருக்குக் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணம் கேள்வி நிபந்தனைகளுக்கேற்ப திருப்பிக்கொடுக்கப்படும்.*

*மேலே குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக்கொள்ளப்படும் படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் இருத்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான சாதனங்கள் 1973.12.26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.*

*எஸ். எம். பி. தொலபிகில்ல,*
*பதில் கப்பற்றுறை ஆணையாளர்.*

*கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,*
*கொழும்பு 1.*

11–421—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

---

### *நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சு*

*ஆள்புல பிராந்திய பொறியியல் அமைப்பு—கிழக்குப் பிராந்தியம்*

*கிழக்கு மாகாணத்துள் அடங்கும் இங்கினியாகலை, அம்பாரை, கல்முனை, உன்னிச்சை, மட்டக்களப்பு, செங்கலடி, மகாஓயா மூதூர், கந்தளாய், திருகோணமலை, கோமரங்கடவெல ஆகிய நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவுகட்குப் பொருட்களைக் கொண்டுசெல்லும் வாகனங்களை வாடகைக்கு விடுவதற்கான கேள்விப் பத்திரங்களை கிழக்குப் பிராந்தியத்திற்கென மட்டக்களப்பிலுள்ள வேலைகள் பணிப்பாளரின் காரியாலயத்தின் கேள்விப் பத்திர சபைத் தலைவர் 28.12.73 திகதி காலை பத்து மணி வரை ஏற்றுக்கொள்வார்.*

*(2) ஒவ்வொரு பிரிவிற்குமான கேள்விப்பத்திரங்கள் மட்டக்களப்பு, கிழக்குப் பிராந்திய வேலைகள் பணிப்பாளர் காரியாலயத்திலிருந்து பெறக்கூடிய படிவங்கள் இரண்டில் தயாரிக்கப்படல் வேண்டும். இக்காரியாலயத்திலிருந்து தேவையான இதற்குரிய மேலதிக விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.*

---

### ***முக்கிய அறிவித்தல்***

***இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.***

***எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,***
***அரசாங்க அழுத்தகர்.***

***அரசாங்க அச்சுத் திணைக்களம்,***
***கொழும்பு,***
***1972 ம் ஆடு திசெம்பர் மீ 15 ந் உ.***

(3) கேள்விப் பத்திர வைப்புப் பணமாக ஒவ்வொரு பிரிவிற்கும் ரூபா 25 செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தால், கேள்விப்பத்திரப் படிவங்களும், குறிப்பிட்ட வேலை பற்றிய நிபந்தனைகளின் விபரமும் 26.12.73 ந் திகதி காலை 10 மணிவரை வழங்கப்படும். எனினும் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிப்பார்களென எதிர்பார்க்கப்படும் கேள்விப் பத்திரகாரர்கள் ரூபா 2 மேலதிகமாகச் செலுத்தி குறிப்பிட்ட வேலை பற்றி நிபந்தனைகளின் விபரமும், விசேட நிபந்தனைகளின் விபரமும் பெற்றுக்கொள்ளலாம்.

(4) கேள்விப்பத்திர வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலோ அல்லது மட்டக்களப்பு கிழக்குப் பிராந்திய வேலைகள் பணிப்பாளர் காரியாலயத்திலோ செலுத்தலாம்.

என். ஜி. தாமோதரம்,
வேலைகள் பணிப்பாளர் (கி. பி.).

வேலைகள் பணிப்பாளர் அலுவலகம்,
கிழக்குப் பிராந்தியம்,
மட்டக்களப்பு, 1.12.73.

12–454—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

---

**நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சு**

ஆள்புல பிராந்திய பொறியியல் அமைப்பு—கிழக்குப் பிராந்தியம்

கிழக்கு மாகாணத்துள் அடங்கும் இங்கினியாகலை, அம்பாறை, கல்முனை, உன்னிச்சை, மட்டக்களப்பு, செங்கலடி, மகாஓயா, மூதூர், கந்தளாய், திருகோணமலை, கோமரங்கடவெல ஆகிய நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவுகட்கு மண்வேலை செய்வதற்கான இயந்திரங்களை வாடகைக்கு விடுவதற்கான கேள்விப் பத்திரங்களை கிழக்குப் பிராந்தியத்திற்கென மட்டக்களப்பிலுள்ள வேலைகள் பணிப்பாளரின் காரியாலயத்தின் கேள்விப் பத்திர சபைத் தலைவர் 28.12.73 ந் திகதி காலை 10 மணிவரை ஏற்றுக் கொள்வார்.

(2) ஒவ்வொரு பிரிவிற்குமான கேள்விப்பத்திரங்கள் மட்டக்களப்பு கிழக்குப் பிராந்திய வேலைகள் பணிப்பாளர் காரியாலயத்திலிருந்து பெறக்கூடிய படிவங்கள் இரண்டில் தயாரிக்கப்பட வேண்டும். இக்காரியாலயத்திலிருந்து இதற்குரிய மேலதிக விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

(3) கேள்விப் பத்திர வைப்புப் பணமாக ஒவ்வொரு பிரிவிற்கும் ரூபா 25 செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தால், கேள்விப்பத்திரப் படிவங்களும், குறிப்பிட்ட வேலை பற்றிய நிபந்தனைகளும் விசேட நிபந்தனைகளின் விபரமும் 26.12.73 ந் திகதி காலை 10 மணிவரை வழங்கப்படும். எனினும் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிப்பார்களென எதிர்பார்க்கப்படும் கேள்விப் பத்திரகாரர்கள் ரூபா 2 மேலதிகமாகச் செலுத்தி குறிப்பிட்ட வேலை பற்றிய நிபந்தனைகளின் விபரமும், விசேட நிபந்தனைகளின் விபரமும் பெற்றுக் கொள்ளலாம்.

(4) கேள்விப்பத்திர வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலோ அல்லது மட்டக்களப்பு கிழக்குப் பிராந்திய வேலைகள் பணிப்பாளர் காரியாலயத்திலோ செலுத்தலாம்.

என். ஜி. தாமோதரம்,
வேலைகள் பணிப்பாளர் (கி. பி.).

வேலைகள் பணிப்பாளர் அலுவலகம்,
கிழக்குப் பிராந்தியம்,
மட்டக்களப்பு, 1.12.73.

11–455—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

---

**நெல் சந்தைப்படுத்தல் சபை**

நெல் சந்தைப்படுத்தல் சபை, இல. 5, எலிபாங்கு வீதி, கொழும்பு 5, மத்திய கேள்விச் சபைத் தலைவரால் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்ட சேவைகளுக்கும் நிர்மாண வேலைகளுக்கும் எனக் கேள்விப் பத்திரங்கள் 1973 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ம் திகதி பி. ப. 2.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கீழ்க்காணும் சேவை அல்லது நிர்மாண வேலைக்குரிய கேள்வி வைப்புப் பணத்தை, கொழும்பு 5, இல. 5, எலிபாங்கு வீதியிலுள்ள நெல் சந்தைப்படுத்தல் சபையின், நிதி முகாமையாளரிடம் கட்டிப் பற்றுச்சீட்டுச் சமர்ப்பித்தவுடன் கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும். ஒவ்வொரு சேவை அல்லது நிர்மாண வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் சமர்ப்பிக்க வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள் 1973.12.27 ம் திகதி பகல் 12 மணி வரை விநியோகிக்கப்படும்.

4. அரசாங்கத் திணைக்களங்கள் அல்லது கூட்டுத் தாபனங்களுடன் கட்டிட வேலைகளுக்காகக் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்களுக்கு “ கொந்தராத்துக்காரர் பதிவுப் புத்தகம் ” சமர்ப்பித்ததும் கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும்.

5. மேற் கொண்ட விபரங்களை, இல. 5, எலிபாங்கு வீதி, கொழும்பு 5 ல் உள்ள நெல் சந்தைப்படுத்தல் சபையின் மத்திய கேள்விச் சபை காரியதரிசியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டபிள்யூ. டபிள்யூ. ஜே. மெண்டிஸ்,
பொது முகாமையாளர்,
நெல் சந்தைப்படுத்தல் சபை.

நெல் சந்தைப்படுத்தல் சபை,
இல. 5, எலிபாங்கு வீதி,
கொழும்பு 5,
1973 ம் ஆண்டு டிசம்பர் மீ 4 ந் உ.

கேள்வி அட்டவணை

| கேள்வி விபரங்கள் | கேள்வி வைப்புப்பணம் | | |
|---|---|---|---|
| | திருப்பிக் கொடுப்பது | திருப்பிக் கொடாதது | கொந்தராத்துக் காரர் பதிவு செய்யப்பட்ட தொகை |
| | ரூபா | ரூபா | ரூபா |
| 1. கொக்கலை நெ.ச.ச. களஞ்சியமும் அலுவலகமும் திருத்த வேலைக்கான கேள்வி .. | 250 .. | 10 .. | 25,000 |
| 2. மட்டக்களப்பு, கிரான் களஞ்சிய நிர்மாண வேலைக்கான கேள்வி | 250 .. | 10 .. | 50,000 |
| 3. மட்டக்களப்பு, மண்டபத்தடி நெ.ச.ச. களஞ்சியம் திருத்தி அமைத்தற்கான கேள்வி .. | 250 .. | 10 .. | 50,000 |
| 4. 11 கொதி நீர் ராங்கிகள் திருத்துவதற்கான கேள்வி .. | 250 .. | 10 .. | — |
| 5. திருகோணமலைப் பகுதியில் போக்குவரத்துச் சேவைக்கான கேள்வி | 100 .. | 10 .. | — |
| 6. அம்பாறைப் பகுதியில், போக்குவரத்துச்சேவைக்கான கேள்வி .. | 100 .. | 10 .. | — |

12–442—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

## அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களம்

முத்திரையிடப்பட்ட கடிதவுறைகளில் தேவை நிரப்பீடு (சப்ளை)

கொழும்பு 1, அஞ்சல் தொலைத்தொடர்புத் தலைமை அலுவலகக் கட்டிடத்திலுள்ள, அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களத்து, திணைக்கள கேள்விச் சபையின் தலைவர், முத்திரையிடப்பட்ட கடிதவுறைகளின் தேவை நிரப்பீட்டிற்கான கேள்விப் பத்திரங்களை 1974 ஜனவரி 29 ம் திகதி மு. ப. 10.00 மணிவரை பெறுவார்.

2. கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்விப்பத்திரக்காரர் இருப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். கேள்விப்பத்திரங்கள், 1 வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில், குறிப்பிட்டுள்ள நேரத்தில், அஞ்சல் அதிபர் நாயகத்தின் அலுவலகத்திலே திறக்கப்படும்.

3. 1974 ஜனவரி 20 ம் திகதி மு. ப. 10.00 மணிவரை கொழும்பு 1, பிரதான அஞ்சல் அலுவலகத்திலுள்ள முத்திரைக் கணக்காளரின் அலுவலகத்திலிருந்து கேள்விகள் செய்யப்படவேண்டிய பாரங்களுக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளப்படலாம்.

4. எல்லாக் கேள்விப்பத்திரங்களும் இரட்டைப் பிரதிகளில் தயாரிக்கப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படும் உறைகளின் மேல் வலது புற மூலையில் "முத்திரையிடப்பட்ட கடிதவுறைகளின் தேவை நிரப்பீட்டிற்கான கேள்வி" என குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்களும் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படலாம். உள்ளூரிலுள்ள கேள்விப்பத்திரகாரர் ஒருவர், தனது கேள்விப்பத்திரத்தை இம்முறையில் அனுப்புவதற்கு விரும்பாவிடில், அவர் அல்லது அவரது முகவர், பொறியிடப்பட்ட விபரங்களும் கேள்விப்பத்திரகாரரின் பெயரும் முகவரியும் உறையின் மீது எழுதப்பட வேண்டும். கொழும்பு தலைமை அலுவலகக் கட்டிடத்திலுள்ள அஞ்சல் அதிபர் நாயகமும், தொலைத்தொடர்பு அதிபரினது அலுவலகத்தில் நேரில் கொடுத்துப் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

6. **கேள்விப்பத்திரங்கள்** பெறப்படமுன், **கேள்விக்கட்டுப்பண**மாக **ரூபா** 50, கொழும்பு 1 லுள்ள, பிரதான அஞ்சல் அலுவலகத்தின் **17 வது** பீடத்தில் (கவுண்டரில்) கட்டப்பட்டு, அதற்கான பற்றுச்சீட்டு காட்டப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 1974 ஜனவரி 28 ஆம் திகதி மு. ப. 10.00 மணிவரை கொடுக்கப்படும்.

7. வரையறுக்கப்பட்டுள்ள விதத்துக்கு அமைவாக, மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

8. இக்கேள்வியின் பொருட்டு, இறக்குமதி உத்தரவுப் பத்திரத்துக்கான சிபாரிசை இத்திணைக்களம் செய்யமாட்டாத காரணத்தால், மூலப்பொருள்களுக்கான இறக்குமதி உத்தரவுப் பத்திரம் தேவையில்லாத ஒப்பந்தகாரரிடமிருந்து மாத்திரமே, கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

9. விபரங்கள், நிபந்தனைகள் சார்பான மேலதிகமான தகவல்கள் கொழும்பு 1, பிரதான அஞ்சல் அலுவலகத்திலுள்ள முத்திரை கணக்காளரிடமிருந்து விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளப்படலாம்.

ஏ. ஆர். எம். ஜெயவர்த்தன,
அஞ்சல் அதிபதியும் தொலைத்தொடர்புப் பணிப்பாளரும்.

அஞ்சல் தொலைத்தொடர்புத்
தலைமை அலுவலகம்,
கொழும்பு 1.

12–456—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

---

## அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களம்

பாவனைக்குதவாத பொருட்களின் விற்பனை

மருதானை, அ. தொ. களஞ்சியத்திலுள்ள பாவனைக்குதவாத பொருட்களை விற்பனை செய்வதற்கான கேள்விகள் 1974 ஜனவரி 10 ஆம் திகதி மு. ப. 10 மணிவரை, கொழும்பு 1, அஞ்சல் தொலைத்தொடர்புத் தலைமை அலுவலகம், 5 வது மாடி, பிரதான தொலைத்தொடர்பு எந்திரியின் அலுவலகம், கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கொழும்பு 1, அஞ்சல் தொலைத்தொடர்புத் தலைமை அலுவலகம், 5 வது மாடி, பிரதான தொலைத்தொடர்பு எந்திரியின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடியதாகவுள்ள படிவங்களில், இரு படிகளில் கேள்விகளைத் தயாரித்தல் வேண்டும். பிரதான தொலைத்தொடர்பு எந்திரியிடமிருந்து சகல விவரங்களை அறிவதுடன் அவரின் அலுவலகத்தில் கேள்விச் சாதனங்களையும் பரிசோதனை செய்யலாம்.

3. கேள்வி கேட்க விரும்புகிறவர்கள், ஏதுமொரு அஞ்சல் அலுவலகத்தின் அஞ்சல் அதிபரிடமிருந்தோ அல்லது கொழும்பு 1, ம. த. அ. தந்திக் காசாளரிடமிருந்தோ கேள்விக் கட்டுப் பணமாக ரூபா 100/- செலுத்தியதாகப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பாராயின், அவர்களுக்கு பிரதான தொலைத்தொடர்பு எந்திரியின் அலுவலகத்தில் 1974 ஜனவரி 4 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை கேள்விச் சாதனங்கள் வழங்கப்படும்.

எச். டி. எஸ். எ. குணவர்த்தன,
பிரதான தொலைத்தொடர்பு எந்திரி.

பிரதான தொலைத்தொடர்பு
எந்திரியின் அலுவலகம்,
5 வது மாடி,
அஞ்சல் தொலைத்தொடர்புத் தலைமை அலுவலகம்,
லோட்டஸ் வீதி,
கொழும்பு 1.

12–468—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

உள்ளூர் ஓடுகள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்

உள்ளூர் ஓடுகள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்களை, 1973.12.28 ஆந் திகதி முற்பகல் 11.00 வணி வரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக்கொள்வார்.

உள்ளூர்த் தட்டை ஓடுகள்—எண்ணிக்கை 15,040

உள்ளூர் மூலை ஓடுகள்—எண்ணிக்கை 120.

**அளவுகள்.**—மாதிரிப் படத்திலே காட்டப்பட்டுள்ளவாறு. 'அஸ்பெஸ்ராஸ்' தகடுகளுக்குக் குறுக்கே அரைவட்ட வடிவமான களிமண் ஓடுகள் வைக்கப்பட வேண்டும். அவை பலமானவையாகவும் முழுவதும் நன்கு சுடப்பட்டவையாகவும் இருக்க வேண்டும். உண்மையான அளவும் உருவும் கொண்டவையாகவும், அடுக்கப்படும்போது திருகல்கள், கலப்புகள் அல்லது ஒழுக்குகள் அத்துடன் வளைவுகள் அற்றவையாகவும் இருக்க வேண்டும். தட்டைக் கூரைக் களிமண் ஓடுகள் இலங்கைத் தரத்தின் அளவுக்குக் குறையாதவையாக இருக்கவேண்டும்.

2. கேள்விக்காரர்கள் பின்வருவனவற்றை வழங்குவதற்காகக் குறிக்கலாம். முன்னைய இருப்பு, கிருலப்பனை மத்திய வேலைத்தலத்தில் விநியோகிக்கப்பட்டவை. கேள்விக்காரர்கள் முந்திய விநியோகக் காலத்தைக் குறிப்பிடலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 100/- கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் கணக்கில் வரவுவைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி, 1973 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 27 ந் தேதி நண்பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சிட்டை கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப்பெற வேண்டுமாயின் கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காக குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையு முன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் "உள்ளூர் ஓடுகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்" எனக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்கக் கிழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத் தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலமும் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்றமுடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக் கொள்ளக் கூடாது.

7. கேள்விக்காரர் விநியோகம் சம்பந்தமான முழுவிபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக் கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக்காட்ட வேண்டும்.

8. தேர்வு பெற்ற கேள்விக்காரர்கள் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது, தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1973.12.28 ந் திகதி முற்பகல் 11 மணிக்குக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர்கள் சமூகமளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

11. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வை பொறியியலாளர் காணி அபிவிருத்தித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம், கொழும்பு 1,
1973 ம் ஆண்டு டிசெம்பர் மீ 04 ந் உ.
சீசீ/2/460.

12-390—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

---

**நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**இலங்கை மின்சாரச் சபை**

**போவத்தென மின்திட்டத்திற்கு உபகரணம் வழங்கல், அமைத்தல் சம்பந்தமான கேள்விப்பத்திரங்கள்**

இலங்கை மின்சாரசபைத் தலைவர், பின்வரும் விவரப்படி அறிக்கைப் படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களைக் கோருகின்றார் :—

(1) மின்–இயந்திர ஒப்பந்தம் 1 ல் குறிக்கப்பட்டுள்ளபடி, இலங்கை, கொழும்பில் பெறுமதி, காப்புறுதி, ஏற்றிறக்கற் செலவுட்பட பொருத்தப்பட்ட பாகங்களுடன் கழிவுப்பொருள் தாங்கியையும் தடைக்குத்திகளையும் இலங்கை, நாவுள வேலைத் தலத்தில் கொணர்ந்து தருவதற்கும் அமைப்பதற்கும், சக்கரம் பொருத்தப்பட்ட படலை, கழிவுப்பொருள் தாங்கி வாரியுடன் பொதுவான மின்சார இயந்திர உபகரணங்கள், கட்டுப்பாட்டு மேடைக் கம்பி வேலைகள் உள்ளடக்கி சுரங்கத்தின் உட்புறத்தில் அமைக்கவும்.

(2) மின்–இயந்திர ஒப்பந்தம் 2 ல் குறிக்கப்பட்டுள்ளபடி, விசைப்பொறி உருளை, மின்பிறப்பிக்கும் கருவி, மின்னில்லப் பாரந்தூக்கி மின்மூலமாற்றிகள், விசைமாற்றிக்கருவிகள், மின்இயந்திரத்திற்குத் தொடர்பான மின்சார இயந்திர உபகரணங்கள், உருக்கு ஆதாரப் பொருட்கள் உள்ளிட்ட மின்விசைக்குமிழ் நிலைய உபகரணம், மின் அறிகுறிகளைப் பெறும் உபகரணத்துடன் தொடர்பு படுத்தும் உபகரணம் ஆகியவற்றை இலங்கை, நாவுள வேலைத்தலத்தில் வழங்கி அமைத்தல்.

(3) மின்–இயந்திர ஒப்பந்தம் 3 ல் குறிக்கப்பட்டுள்ளபடி, பொதுத்துறை சார்ந்த **(Civil)** வேலைகள் தவிர நீர்க்குழாய்களை இலங்கை, நாவுள வேலைத்தலத்தில் வழங்கி அமைத்தல்.

ஒவ்வொரு தனித்தனி ஒப்பந்தத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் எல்லாப் பொருட்களுக்கும் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு தனித்தனி ஒப்பந்தத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களின் ஒரு பகுதிக்கு மட்டுமென கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படின் அவை கவனிக்கப்படமாட்டா.

**மின்–இயந்திர ஒப்பந்தம் 1 :** (குறிக்கப்படாதவிடத்து வழங்கலும் அமைத்தலும்)

(1) பன்னிரண்டு கொண்ட ஒரு செட் கழிவுப்பொருள் தாங்கி மேடைகள். **(panels)** ஒவ்வொரு மேடையும் இணைப்புப் பகுதிகளுடன் சுமார் 10 அடி அகலம் 9½ அடி உயரத்தில் இருக்கவேண்டும். (வழங்குதல் மட்டும்)

(2) இரண்டு செட் தடைக்குத்தி பாதை வழி, ஆதார நிலைகளுடனும், தரை அடைப்புகளுடனும் இணைப்புப் பாகங்களுடனும். (வழங்குதல் மட்டும்)

(3) உயர்த்தும் சட்டத்துடன் கூடிய ஒரு செட் நான்கு தடைக்குத்திகள் ஒவ்வொரு தடைக்குத்தியும் சுமார் 12 அடி அகலம் 8 அடி உயரத்தில் அமையவேண்டும். (வழங்குதல் மட்டும்)

(4) வழிப்பாதைகள், வழிகாட்டிகள், சட்டங்கள், அச்சுப்பொறிகள் பாரம் உயர்த்திகள், கட்டுப்பாட்டுக்கருவிகள், இணைப்புப்பாகங்கள் ஆகியவற்றுடன் பூர்த்தியான 12 அடி அகலமும், 18 அடி உயரமும் கொண்ட சக்கரம் பொருத்தப்பட்ட ஒரு படலை.

(5) ஒரு கழிவுபொருள் தாங்கி வாரியும் துணைக்கருவிகளும்.

(6) குடைவழி உட்புற இல்லத்தில் வெளிச்சம் அமைத்தலும் மின் விநியோகத்திட்டமும்.

**ன்–இயந்திர ஒப்பந்தம் 2 :** (வழங்குதலும் அமைத்தலும்)

(1) வரை குழாய்ப்பாதைகளும் அதுசம்பந்தப்பட்ட கருவிகளும் கூடிய ஆளுநருடன், 56,000 **BHP** விசைப்பொறி உருளை ஒன்று.

2) "பட்டர் பிளை" **(butterfly)** மாதிரியைப் போன்ற ஒரு விசைப்பொறி உருளை நுழைவாயில் அடைப்பிதழ் 13 அடி விட்டம்.

(3) 18 அடி 3 அங்குல அகலமும், 13 அடி 10 அங்குல உயரமும் கொண்ட துளைகளுக்கேற்ற வரை குழாய்த் தடைக் குத்திகள் இரண்டு. சட்டங்களுடனும் துணைக்கருவிகளுடனும்.

(4) தூக்கிச் செல்லக்கூடிய எண்ணெய்ச் சுத்திகரிக்கும் இயந்திரம் ஒன்று.

(5) செங்குத்தான தண்டும், கட்டுப்பாட்டமைப்புடன் கூடிய தூண்டுதல் முறைக் கருவிகளும், தாமாக மின்மூல அளவை ஒழுங்குபடுத்தும் கருவியும், வேறு சில துணைக்கருவிகளும், அடித்தகடுகளும், இலக்கச்செய்யும் அச்சாணிகள் ஆகியவற்றுடனும் கூடிய **47,100 KVA** மின்பிறப்பிக்கும் கருவி ஒன்று.

(6) மின்மூல மாற்றிகள், மின்னோட்ட மாற்றிகள், மின்னற்றடைக் கருவிகள்., கொள்ளவுக்கருவிகள், மின்துண்டிப்பு விசைக் கருவி, உள்ளடக்கப் பொருட்களுடன் கூடிய ஒரு மின் பிறப்பிப்புக்கருவி பாதுகாப்பு உபகரணம்.

(7) விசைக்கருவி, பங்கீட்டு மாற்றி, தடைகள் உள்ளடக்கப் பொருட்கள் ஆகியவற்றுடன் கூடிய மின்பிறப்பிக்கும் கருவி நடுநிலைநாட்டு உபகரணக்கூட்டு ஒன்று.

(8) ஏசி மின்சார இயந்திரம் துணைச்சேவைகளுடன்.

(9) டீசி மின்சார இயந்திரம் துணைச்சேவைகளுடன்.

(10) மின்சார இயந்திரக்கிளை மட்டம் பார்க்கும் மேடை, பிரதான கட்டுப்பாடு, அஞ்சல் மேடையுடனும்.

(11) மின்நிலையப்பாரந்தூக்கி ஒன்று—மின்சார இயந்திரத்துடன் தண்டவாளமும், கம்பி வடமும், துணைக்கருவிகளுடன் உபகரணங்களை அமைக்கும் போதிய வல்லமையுடன். (சுமார் 120 தொன் நிறையில் பிரதான கொழுக்கி, துணைக்கொழுக்கிகள் 10 தொன்கள்)

(12) நிலைய சேவை காற்றமுக்கிகளும், அமுக்கப்பட்ட காற்று அமைப்புகளும்.

(13) 48,000 **KVA** மின்மாற்றி ஒன்று, 3 **Phase**, **12,500/132,000** வோல்ட்ஸ், எண்ணெயால் மூடப்பட்டதும் வெளிப்புறப் பாவிப்புக்கேற்றதுமானதும், மின்மூல அளவுமாற்றி, மின்னற்றடைக் கருவிள், துணைக்கருவிகள், நிலைய தீ பாதுகாப்பு முறைகள் கொண்டதும்.

(14) மின்பிறப்பிப்புக் கருவி ஆதாரப்பொருளுடன் கூடிய பேஸ்விசைக் கலம் **(Phase bus Structure)** வேறுபடுத்தப்பட்டது. **2750 ampere**, 3 **phase** கொண்டது, சுமார் 100 அடி.

(15) ஒரு செட் மின்னோட்ட துண்டிப்புகள் **132 KV 2500 MVA**

(16) கூட்டாகக் காற்றில் இயங்கும் **132 KV 3 pole** மின்விசை ஒன்று, பூமித்தொடர்புத் தகடுகளுடன்.

(17) 132 **KV** கொள்ளளவு மின்மூல மாற்றிகள் மூன்று.

(18) 132 **KV** மின்னோட்ட மாற்றிகள் மூன்று.

(19) மின்விசைக்குமிழ் நிலைய மின்னற்றடை அமைப்பு.

(20) "கெரியர்" **(Carrier)** தொலைபேசிக் கருவிகள்.

(21) "கொண்டுயிட்ஸ்" **(conduits)** மின்குழாய்களும், கம்பி வடத் தட்டுகளும் **(Trays)** துணை உபகரணங்களும்.

(22) தண்ணீர்க் குளிர்ப்படுத்தும் முறையும், சேவைத்தண்ணீர்த் திட்டமும்.

(23) தண்ணீரகற்றலும், வடிகாலும், நீர்வாங்குக் குழாய்களும்.

(24) தயார்நிலையில் டீசல் மின்பிறப்பிப்பு இயந்திரம் துணைக்கருவிகளுடன்.

(25) வேலைத்தல உபகரணம்.

(26) மின் அறிகுறிகளைப் பெறுவதும் தொடர்பு படுத்தும் திட்டமும்.

(27) நீர்நிலை அளவு பார்த்தல் உபகரணம்.

(28) உக்குவளை மின்விசைக்குமிழ் நிலைய விரிவாக்கம்—ஆதாரப் பொருளுடன் கூடிய மின்விசைப்பொறியும் உபகரணமும், கட்டுப்பாட்டு மேடை, **PLC** உபகரணம், நிலைநாட்டுப் பொருட்கள்.

(29) இடம் விட்டு இடம் பெயரக்கூடிய ஒரு பாரந்தூக்கி—5 தொன் நிறை.

**மின்-இயந்திர ஒப்பந்தம் 3 : (வழங்கலும் அமைத்தலும்)**

(1) $14\frac{1}{2}$ அடி விட்டத்தால் ஆன சுமார் 500 நீள அடி கம்பி உருக்கு நீர்க்குழாய்கள் வளைவுகளுடன்.

(2) மணி முகப்பு போன்ற " சேர்ஜ் சேம்பர் " துளைகள்.

**(Surge Chamber bell-mouth Orifice)**

மூன்று ஒப்பந்தங்களும் நிறைவேற்றப்படுவதற்குரிய காலங்களையும் திகதிகளையும் கீழே தரப்படும் அட்டவணை காட்டுகின்றது.

| நிறைவேற்றப்படுவதற்குரிய காலங்களும் திகதிகளும் | மின்-இயந்திர ஒப்பந்தம்-1 | மின்-இயந்திர ஒப்பந்தம்-2 | மின்-இயந்திர ஒப்பந்தம்-3 |
|---|---|---|---|
| கேள்விப்பத்திரங்கள் கிடைக்கக் கூடிய திகதி .. | 73.12.18 | 74.01.15 .. | 74.03.01 |
| கேள்விகள் முடிவடையுந் திகதி | 74.03.19 .. | 74.05.10 .. | 74.06.04 |
| ஒப்பந்தவேலை வழங்கக்கூடிய திகதி .. .. | 74.07.01 .. | 74.10.01 .. | 74.10.01 |
| உபகரணங்களை நிறுவ வேலைகளைத் தொடங்க எதிர்பார்க்கப்படும் காலம் .. | 76.03.01 லிருந்து 76.05.01 வரை | * 76.01.01 லிருந்து 77.08.01 வரை | 76.01.01 லிருந்து 76.12.01 வரை |

*ஒப்பந்தக்காரர் நிறுவவும், வேலைகளைத் தொடங்கவும் வேண்டிய இனங்களை இது குறிக்கிறது.

மூன்று ஒப்பந்தங்களில் தனித்தனியாக ஒவ்வொன்றுக்குமான கேள்விப்பத்திரங்கள், உரிய திகதிகளில், மூன்று பிரதிகள் கொண்ட முதற்கூடு இலங்கை நாணயத்தில் ரூபா 300/–கொள்விலையில் கிடைக்கும். ஒவ்வொரு மேலதிகக்கூட்டுக்கும் ரூபா 125– கூடுதலாகச் செலுத்தவேண்டும். ஒவ்வொரு மனுவும் இலங்கை மின்சாரச் சபைப் பெயரால் எழுதப்பட்ட காசோலை அல்லது காசுக்கட்டளையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பின் காணப்படும் முகவரிக்கு எழுதிப் பத்திரங்களைக் பெறலாம்.

தலைவர்,
மகாவலி அபிவிருத்திச் சபை,
இல. 11, யாவத்தை ரோடு,
கொழும்பு–5, இலங்கை.

கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிப்போர், இங்கு விவரிக்கப்பட்டுள்ள உபகரணங்களைப் பொருத்தமான அளவுகளில் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவராகவும் திறமை பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்கூறிய உபகரணங்களுக்குக் கேள்விகள் கோருவதில் ஆர்வமுள்ள நிறுவனங்கள், இதேபோன்ற உபகரணங்கள் உற்பத்தி செய்வதிலும் அல்லது தருவித்து நிறுவுவதிலும் தங்களுக்குள்ள அனுபவங்கள் அடங்கிய விபரங்களையும் கேள்விப்பத்திரங்கள் பெற அனுப்பும் மனுக்களுடன் சமர்ப்பிக்கவேண்டும். கேள்வி கோர விரும்புவோர் முற்கூட்டியே இத்தகவல்களை மகாவலி அபிவிருத்திச் சபைத்தலைவரிடம் சமர்ப்பித்து, அவர்கள் பல்வேறு ஒப்பந்தங்களுக்கும் கேள்வி அனுப்புவதற்குத் தகுதியுடையவரென உறுதிப்பாடு பெற வேண்டுமென அறிவுறுத்தப்படுகின்றனர்.

டி. டபிள்யு. மெண்டிஸ்,
தலைவர்,
இலங்கை மின்சார சபை.

த. பெ. இல. 540,
கொழும்பு–2,
இலங்கை.

12–432—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

---

### கேள்விப்பத்திர அறிவித்தல்

*கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபை தலைவர், 1973.12.28 ஆந் தேதி மு.ப. 10.00 மணிவரை பின்வரும் வேலைகளுக்கான வேமுன பொறியிட்ட கேள்விப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளுவார்.—*

*விவரணம்*

| *விவரணம்* | *ஒப்பந்தகாரர்களின் ஆகக் குறைந்த பதிவுத் தொகை* |
|---|---|
| *1. மாத்தறைச் சாலை-கட்டடங்கள் வீதிகள் காலைகள் அமைத்தல்-ஈசி/502* | *ரூபா 2,25,000.00* |
| *2. அளவ்வைச் சாலை-மண்வேலையும் கட்டடங்கள் வீதிகள், காலைகள் அமைத்தலும்-ஈசி/585* | *ரூபா 50,000.00* |

*பிரதம சிவில் பொறியியலாளிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய பத்திரங்களில் கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப் படவேண்டும். இவரிடமிருந்து எல்லா விவரங்களையும் பெற்றுக் கொள்வதுடன் இவரின் அலுவலகத்தில் படவரைவுகளையும் பரிசீலனை செய்யலாம். ஒவ்வொரு வேலைக்கும் எதிராக காட்டப்பட்ட தொகைக்காக இ.போ.ச. வில், அரசாங்கத் திணைக்களங்களில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களில் பதிவு செய்யப் பட்ட கொந்தராத்துகாரர்கள் தேவையான கேள்விப்பத்திரச் சாதனங்கள் வழங்கப்படுவதற்காக, 1 ஆம் விடயத்துக்கு ரூ. 200/- க்கும் 2 ஆம் விடயத்துக்கு ரூ. 100/- க்கும் மீளளிக் கப்படக்கூடிய கேள்விப் பத்திரக் கட்டுப்பணப் பற்றுச் சீட்டையும் மீளளிக்கப்படமாட்டாத கேள்விப் பத்திரக் கட்டணமாக 1 ஆம் விடயத்துக்கு ரூ. 40/- க்கும் 2 ஆம் விடயத்துக்கு ரூ. 25/- க்குமான பற்றுச்சீட்டையும் 1973.12.27 ஆந் தேதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது முன்னதாக பிரதம சிவில் பொறியியலாளருக்கு காட்டுவதன் பேரில் கேள்வியிடத் தகவுடையவர்களாயிருப்பார்கள். கேள்வியிடுபவர்கள் தங்களது சான்றுரைகளை பரிசோதனைக்குக் காட்டவேண்டும். அவ்வித சான்றுரைகள் பிரதம சிவில் பொறியியலாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே கேள்விப் பத்திரக் கட்டுப்பணத்தை காசாக மாத்திரம் பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கட்டலாம்.*

*பிரதம சிவில் பொறியியலாளர்,*
*இலங்கைப் போக்குவரத்துச் சபை.*

*200, கிருல வீதி,*
*கொழும்பு-5.*

*12-381—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90*

---

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

கீழ்க்காணும் மின்தறித் திட்டங்களில் இருக்கும் பழுதடைந்த துணிகளைக் கொள்ளவனவு செய்து எடுத்துச் செல்வதற்குரிய கேள்விகளை 1974.01.15 காலை 10 மணி வரை கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறுகைத் தொழிற்றிணைக்களக் கேள்விச்சபைத் தலைவர் ஏற்றுக்கொள்ளவார்.

| திட்டத்தின் பெயர் | | தொகை யார்க் கணக்கில | | வேண்டப்படும் கேள்விக்கட்டுப்பணம் | |
|---|---|---|---|---|---|
| மின்தறித் திட்டம், கேகாலை | .. | $8,194\frac{1}{4}$ | .. | 525 | 0 |
| மின்தறித் திட்டம், குருவிற்ற | .. | $4,549\frac{3}{4}$ | .. | 225 | 0 |
| மின்தறித் திட்டம், லேவல்ல | .. | $15,864\frac{1}{2}$ | .. | 725 | 0 |
| மினதறித் திட்டம், குருநாகல் | .. | $12,318\frac{1}{2}$ | .. | 600 | 0 |
| மின்தறித் திட்டம், பொல்கொல்லை | .. | $7,547\frac{7}{12}$ | .. | 450 | 0 |
| மின்தறித் திட்டம், மாத்தளை | .. | 1,816 | .. | 75 | 0 |
| மின்தறித் திட்டம், அனுராதபுரம் | .. | $3,907\frac{1}{2}$ | .. | 200 | 0 |
| மின்தறித் திட்டம், பட்டகன்வில, காலி | | $1,196\frac{3}{4}$ | .. | 100 | 0 |
| மின்தறித் திட்டம், நுவரெலியா | .. | $12,562\frac{3}{4}$ | .. | 625 | 0 |

2. 1974.01.14 நண்பகல் 12 மணிக்கோ அதன் முன்போ ஒவ்வொரு திட்டத்துக்கும் நேரே கொடுக்கப்பட்டுள்ள தொகைகளை மீளப் பெறக் கூடிய கேள்விக்கட்டுப்பணமாக செலுத்திக் கொழும்பு 1, பிரிஸ்டல் வீதியிலுள்ள ஹேமாஸ் கட்டிடத்திலிருக்கும் சிறு கைத்தொழிற் பணிப்பாளரிடமிருந்து கேள்விப் படிவங்களையும் கேள்வி நிபந்தனைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

3. மேலதிக விபரங்கட்குக் கொழும்பு 1, பிரிஸ்டல் வீதியிலுள்ள ஹேமாஸ் கட்டிடத்திலிருக்கும் சிறு கைத்தொழிற்றிணைக்களப் பணிப்பாளருக்குத் தயவு செய்து விண்ணப்பிக்கவும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் 3–1—(5-68)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம், கொழும்பு 1,
1973.12.01.

12–384—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

## கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

பொருட்கள் ஆகியன விற்பனை

அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களம்

**இறுதித் தீர்மானம்**

| சேவையின் விபரம் | முடிவு தேதி | கேள்விப்பத்திரகாரர் | ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதம் | ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பத்திரகாரர் |
|---|---|---|---|---|
| 1,50,00,000 முத்திரையிடப்பட்ட கடிதஉறைகளை அச்சிடுதலும் வழங்கலும் | 27 பெப்பிரவரி 1973 .. | 1 .. | 1000 முத்திரையிடப்பட்ட கடித உறைகள் ரூபா 22.50 வீதம் | அன்ரன் விக்கிரமசிங்க லிமிட்டெட், அ. அ. பெட்டி 1101, கபூர் கட்டிடம், 29, பிரதான வீதி, கொழும்பு. |

ஏ. ஆர். எம். ஜயவார்தன,
அஞ்சல் அதிபதியும் தொலைத்தொடர்புப் பணிப்பாளரும்.

2-366—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

---

## பொருட்கள் விற்பனையும், பிறவும்

நீதவான் மன்று—முல்லைத்தீவு

ஏலவிற்பனை

பின்வரும் பறிமுதல் செய்யப்பட்டதும், கோரப்படாததுமான பொருட்கள் 31.12.73 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு அநுராதபுரம் பிரதேச நீதிமன்றங்களின் நிருவாகச் செயலாளர் முன்னிலையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஏலத்தில் விற்கப்படும் இப்பொருட்கள் அன்று காலை 10.00 மணி முதல் 12.00 மணிவரை நீதிமன்ற வளவில் பார்வைக்காக வைக்கப்படும். ஏலத்தில் இப்பொருட்கள் வாங்குவோர் அவற்றிற்கான பணத்தை உடன் கொடுத்து அவற்றை அப்பொழுதே அப்புறப்படுத்தல் வேண்டும். ஏலத்தில் வாங்கும் பொருட்களுக்கு காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

சி. ஆனந்தக்குமாரசுவாமி,
நீதவான்—வவுனியா.

29.11.73.

| வழக்கிலக்கம் | பொருட்களின் விபரம் |
|---|---|
| 3011 | 1 கோடரி |
| ஏ32/72 | 1 கோடரி |
| 2836 | 1 கோடரி |
| 1436 | 2கோடரிகள் |
| 1358 | 1 கோடரி |
| 2503 | 1 கோடரி |
| 2368 | 1 கோடரி |
| 1435 | 1 கோடரி |
| 1359 | 1 கோடரி |
| 1360 | 1 கோடரி |
| — | 4 கோடரிகள் |
| 2503 | 1 காட்டுக்கத்தி |
| 1972 | 1 காட்டுக்கத்தி |
| 2766 | 1 காட்டுக்கத்தி |
| 1359 | 1 காட்டுக்கத்தி |
| — | 5 காட்டுக்கத்திகள் |
| 1435 | 1 மண்வெட்டி |
| 2566 | 1 மண்வெட்டி |
| 1939 | 1 மண்வெட்டி |
| 2240 | 1 மண்வெட்டி |
| — | 4 மண்வெட்டிகள் |
| 2503 | 2 மரம் அரிவாள் |
| 2766 | 2 மரம் அரிவாள் |
| — | 1 மரம் அரிவாள் |
| 1349 | 1 குப்பை விருண்டி |
| — | 3 அலவாங்குகள் |
| 2480 | 1 அரிக்கன் லாம்பு |
| — | 2 அரிக்கன் லாம்பு |
| — | 2 பெற்றோமாக்ஸ் |
| — | 3 பழுதடைந்த டிரங்குப் பெட்டிகள் |
| 1720 | 1 மின்சூள் |
| 1747 | 1 மின்சூள் |
| — | 5 பழுதடைந்த மின்சூள்கள் |
| 1626 | 1 சுருள் பழைய முட்கம்பி |
| — | 1 சுருள் புது முட்கம்பி (¼ அந்தர்) |
| — | 1 சுருள் புது முட்கம்பி (¼ அந்தர்) |
| — | 1 பெரிய சுருள் முட்கம்பி |
| 3036 | 1 உழவு இயந்திர டைனமோ மூடி |
| — | 4 மரப் பீப்பா |
| — | 1 மண்பானை |
| — | 2 பை யூரியா |
| — | 2 பிளாஸ்ரிக் சதடி |
| 1668 | 1 சயிக்கிள் பார் இல. 55796 |
| 2482 | 1 பழுதடைந்த றலி சயிக்கிள் இல. டிடி 48781 |
| 2888 | 1 பழுதடைந்த றலி சயிக்கிள் இல. 69 இ 1087 |
| — | 2 கறள் பிடித்த பழைய சயிக்கிள்கள் (இலக்கங்கள் தெளிவில்லை) |
| — | 1 பழுதடைந்த சயிக்கிள் இல. சி எச் 360 |
| ஏ 3/67 | 1 பழுதடைந்த சயிக்கிள் இல. சி எச் 71979 |
| ஏ 29/65 | 1 பழுதடைந்த சயிக்கிள் இல. பீ ஸ்ற் 55398 |
| — | 5 அலுமினியப் பானைகள். |

12-309—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

## நீதவான் நீதிமன்றம்—மல்லாகம்

26.12.1973 பி. ப. 1 மணிக்குப் பிரதேச நீதிமன்றங்கள் நிர்வாகச் செயலாளர் (யாழ்ப்பாணம்) திரு. கே. சிவரத்தினம் முன்னிலையில் மேற்படி நீதிமன்ற வளவில் பின்வரும் கோரப்படாத பொருட்கள், குறித்த திகதிக்கு முன்பாக எவராலும் கோரப்படாது விடின், பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

26.12.1973 பி. ப. 12 மணிக்கும் 1 மணிக்கும் இடையில் குறித்த பொருட்களை நீதிமன்ற வளவில் பார்வையிடலாம்.

ஏல விற்பனையில் பொருட்கள் வாங்குவோர் உடன் பணம் கொடுத்துப் பொருட்களை அப்புறப்படுத்தல் வேண்டும்.

எம். டி. யேசுரட்ணம்,
நீதவான், மல்லாகம்.

1973 ம் ஆண்டு நவெம்பர் மீ 23 ந் வெ.

| வழக்கிலக்கம் | | பொருட்களின் விபரம் |
|---|---|---|
| 5747 | .. | சிங்கர் துவிச்சக்கர வண்டி இல. எ 2685 |
| எ 496/72 | .. | பெடல் துவிச்சக்கர வண்டி இல். இ 88986 |
| எ 23/73 | .. | றலி துவிச்சக்கர வண்டி இல. டின 90768 |
| எ 48/73 | .. | றலி துவிச்சக்கர வண்டி இல. டிஎல் 25222 |
| எ 103/73 | .. | பெடல் துவிச்சக்கர வண்டி இல. டிடி 2016 |
| எ 104/73 | .. | றலி துவிச்சக்கர வண்டி இல. சிகே 3218 |
| எ 227/73 | .. | றலி துவிச்சக்கர வண்டி இல. டிஎன் 7818 |
| எ 491/72 | .. | துவிச்சக்கர வண்டி பிறேம் இல. எ 613015 |
| எ 9/73 | .. | துவிச்சக்கர வண்டி பிறேம் இல. இஎ 8440 |
| எ 102/73 | .. | துவிச்சக்கர வண்டி பிறேம் இல. பிகே 47328 |
| எ 171/73 | .. | துவிச்சக்கர வண்டி பிறேம் இல. டிஇ 83722 |
| எ 263/73 | .. | துவிச்சக்கர வண்டி பிறேம் இல. ஔவ் 7798 |
| 15442 | .. | துவிச்சக்கர வண்டி பிறேம் இல. எஎன் 37838 |
| எ 498/67 | .. | ஒரு "மோர்கா" மணிக்கூடு—17 ஜுவல்ஸ் |
| எ 144/73 | .. | ஒரு பவுண் காதுக் குச்சி |
| 5670 | .. | ஒரு துவிச்சக்கர வண்டி டைனமோவும் விளக்கும் |
| 6297 | .. | ஒரு நீரிறைக்கும் இயந்திரத்தின் பாகங்கள் 1 றேடியேற்றர், 1 இயந்திரம், 1 கைபிடி 1 உறை |
| 8691 | .. | 1 சூட்கேஸ் |
| 10982 | .. | ஒரு உலக்கை |
| 11450 | .. | 1 கத்தி |
| 11929 | .. | 1 பாளைக் கத்தி |
| 13458 | .. | 2 கத்திகள் |
| 14405 | .. | 1 மண்ணு கத்தி |
| 14809 | .. | 1 பிரம்புக் கூடை |
| 15781 | .. | 1 பாளைக் கத்தி, 1 ரப்பிங் கிற் |
| 16626 | .. | 1 போத்தல் விளக்கு |
| 16707 | .. | 1 உளி |
| 16994 | .. | 1 துவிச்சக்கர வண்டி ஸ்போக் |
| 18082 | .. | 1 மேசைக்கத்தி |
| 18113 | .. | 2 வளைந்த கத்திகள் |
| 18420 | .. | 1 கத்தி |
| 18422 | .. | 1 பாளைக் கத்தி |
| 19360 | .. | 1 இரு. உழுந்து |
| 19365 | .. | 1 இரு. உழுந்து |
| 19440 | .. | 2 லெட் பென்சில்கள் |
| 20146 | .. | 2 பீப்பாக்கள், 1 அலுமினியப் பானை |
| 19565 | .. | 1 கத்தி |
| 18697 | .. | 6 வளைகள், 1 கதவு நிலை |
| 13451 | .. | 1 புது வேட்டி |
| 6847 | .. | 3 பற்றி ரோர்ச் ஒன்று |
| 19856 | .. | 2 கத்திகள் |
| 19288 | .. | 1 பக்கற் காட்ஸ், 1 போத்தல் விளக்கு, 1 பை |
| — | .. | 2 சாடிப் போத்தல்கள் |
| — | .. | 100 வெற்றுப் போத்தல்கள் |
| — | .. | 50 குவளிகள் |
| — | .. | 5 பக்கற் காட்ஸ் |

12-303—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

# ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும்

### *1974 க்குரிய கள்ளுக் குத்தகை மறுவிற்பனை*

குருநாகல் மாவட்டம்

குருநாகல் மாவட்ட அரசாங்க அதிபரால் 85 ம் இலக்கம் கொண்ட 1973 ம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ந் திகதிய ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் "சாராயக் கள்ளுக் குத்தகை விற்பனை குருநாகல் மாவட்டம்—1974" என்னும் தலையங்கத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் உள்ள நிபந்தனைகளுக்கும் நடைமுறையிலிருக்கும் எல்லா மதுபான நிபந்தனைகளுக்குமமையும் கீழ் குறிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளின் கள்ளுக் குத்தகை மறு விற்பனைக்குக் கேள்விப்பத்திரங்கள் 1973 ம் ஆண்டு தெசம்பர் மாதம் 14 ந் திகதி மு. ப. 9.30 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இலக்கமும் தவறணையின் பெயரும்.

1. கிரிஉல்ல கள்ளுத்தவறணை
2. உடுபத்தாவ கள்ளுத்தவறணை
3. நாரம்மல கள்ளுத்தவறணை

*சந்திரானந்த டி சில்வா,*
*குருநாகல் மாவட்ட*
*அரசாங்க அதிபர்.*

கச்சேரி,
குருநாகல்,
4.12.73

12-461—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிக்கப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க, விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை—1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **திசெம்பர்** | **7.12.73** | வெள்ளி | **28.11.73** | புதன் | ந.ப. **12.00** |
| | **14.12.73** | வெள்ளி | **5.12.73** | புதன் | ந.ப. **12.00** |
| | **21.12.73** | வெள்ளி | **12.12.73** | புதன் | ந.ப. **12.00** |
| | **28.12.73** | வெள்ளி | **19.12.73** | புதன் | ந.ப. **12.00** |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
**1972** ம் ஆண்டு ஒகத்து மீ **18** ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.